**STC 432/2022**

**அ.சா. 1 பெயர் : சிவக்குமார்**

**23.07.2026**

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். குவிமுச பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவத்தன்று நான் எத்தனை மணிக்கு எனது வீட்டிற்கு சென்றேன் என்றால் காலை சுமார் 11.30 மணியளவில் சென்றேன். நான் வீட்டிற்கு சென்ற உடனே எனக்கு அடிபட்ட விவரத்தை எனது அக்கா வள்ளியிடம் கூறிவிட்டேன் என்றால் சரிதான். என்னை அடித்ததாக கூறும் சம்பவ இடத்திற்கும் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 400 மீட்டர் ஆகும். எனதுஅக்கா வீடும் அருகில் தான் அமைந்துள்ளது. புகார் மனுவினை நான் எப்போது எங்கு வைத்து எழுதி கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த அன்றே மதியம் சுமார் 02.00 அல்லது 03.00 மணியளவில் காவல் நிலையத்திற்கு சென்று எழுதி கொடுத்தேன். நான் சம்பவம் நடந்து சுமார் 6 மணி நேரத்திற்கு பிறகு தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த உடனேயே மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் சொன்ன முறையில் சொன்ன நாள் தேதி நேரத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றாலும், சொன்ன முறையில் சொன்ன நாள் தேதி நேரத்தில் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

2. எதிரியின் மகளான இருகம்மாளை சம்பவத்திற்கு முன்பு 3 வருடங்களாக காதலித்து வந்தேன் என்றால் சரிதான். மேற்படி இருகம்மாள் இரண்டு முறை வீட்டிலிருந்து என்னுடன் வந்துவிட்டார் என்றாலும் அதன்பிறகு எதிரியின் தரப்பில் புகார் கொடுக்கப்பட்டு அவருடைய மகள் கண்டுபிடித்து கொடுக்கப்பட்டார் என்றாலும் சரியல்ல, மேற்படி இருகம்மாள் தனியாக தான் வீட்டை விட்டு வெளியே போனார், என்னுடன் வரவில்லை.

சம்பவ நாளன்று நானும், எனது அக்கா வள்ளி, மாமா கோவிந்தராஜ் மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் காலை 10.00 மணியளவில் எதிரியின் வீட்டிற்கு சென்று எதிரியின் மகளை பெண் கேட்பதற்காக சென்றோம் என்றாலும் ஆனால் அவருடைய மகளுக்கு 18 வயது பூர்த்தியடையாத காரணத்தினால் எதிரி மறுத்துவிட்டார் என்றாலும் அதன்பிறகு நான் அன்றைய தினம் மது அருந்திவிட்டு வாகனத்தில் சென்றபோது தவறி விழுந்ததால் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அன்றைய தினம் இருகம்மாளை பெண் பார்ப்பதற்காக வேறு ஒரு நபரை எதிரி அவர்கள் வீட்டிற்கு வர சொல்லி இருந்தார், அப்போது இருகம்மாள் வீட்டை விட்டு பிடிக்காமல் ஓடி வந்தபோது நானும் எதேச்சையாக வேலையை முடித்துவிட்டு அருகில் உள்ள எனது வீட்டிற்கு வந்தபோது என்னால் தான் இருகம்மாள் வெளியே ஓடிவந்தார் என்று நினைத்து கொண்டு எதிரி என்னை தாக்க ஆரம்பித்தார்.

3. நான் கூறுவது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பதால் தான் உடனடியாக புகார் மனு கொடுக்கப்படவில்லை என்றாலும் உடனடியாக நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**